# தமிழ்நாடு சட்ட மேலவையின் பட்டதாரிகள் தொகுதிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகளுக்கான வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்தல்

## 1960-ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவு விதிகளின் விதி 31(3) ன் கீழ் அறிவிப்பு

1960–ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவு விதிகளின் விதி 31(3)க்கிணங்க, கீழே முதலாம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்காளர் பதிவு அலுவலரும், 01.11.2010–ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக் கொண்டு புதிதாகத் தயாரிக்கப்படவிருக்கும் வாக்காளர் பட்டியல்களில் பதிவு செய்யப்படத் தகுதியுள்ள ஒவ்வொரு நபரையும் 1960–ஆம் ஆண்டின் வாக்காளர் பதிவு விதிகளில் இணைக்கப்பட்டுள்ள மற்றும் கீழே இரண்டாம்/நான்காம் அட்டவணைகளில் கொடுக்கப்பட்டுள்ள **படிவம் 18 / படிவம் 19–இல், 2010 நவம்பர் மாதம் 6ஆம் தேதிக்குள்** விண்ணப்பிக்குமாறு அழைப்பு விடுக்கின்றார். இவ்விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட வாக்காளர் பதிவு அதிகாரி, உதவி வாக்காளர் பதிவு அதிகாரி அல்லது நிர்ணயிக்கப்பட்ட அலுவலரிடம் அளிக்கலாம். இவர்களைப் பற்றிய விவரங்கள் கீழே முதலாம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்களை நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பலாம். நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் விண்ணப்பங்கள் கிடைக்கும். பூர்த்திசெய்த விண்ணப்பங்களை அங்கேயே அளிக்கலாம்.

**நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்கள்**

| | |
|---|---|
| மாநகராட்சிப் பகுதிகளில் | மாநகராட்சியின் மண்டல அலுவலகங்கள் |
| மற்ற பகுதிகளில் | விண்ணப்பதாரர் வசிக்கும் பகுதியின் வட்டாட்சியர் அலுவலகம் |
| **நிர்ணயிக்கப்பட்ட அலுவலர்** | வட்டாட்சியர் அலுவலகத்தில் வட்டாட்சியர் / துணை வட்டாட்சியர்<br>சென்னை மாநகராட்சியின் மண்டல அலுவலகங்களில் மேலாளர்<br>மற்ற மாநகராட்சிகளின் மண்டல அலுவலகங்களில் உதவி ஆணையர்கள் |

**2. பட்டதாரிகள் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படுவதற்கான தகுதிகள்**

(அ) இந்தியக் குடிமகன்/ள்–ஆகவும் தொகுதியில் சாதாரணமாக வசிப்பவராகவும் இருக்கவேண்டும். மேலும் இந்திய நாட்டின் எல்லைக்குள் உள்ள ஒரு பல்கலைக்கழகத்தின் பட்டதாரி அல்லது அதற்கு இணையான ஒரு தகுதியினை 01.11.2010–க்கு முன்பாக குறைந்தபட்சம் மூன்றாண்டுகளாகப் பெற்றிருந்து, வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்படத் தகுதியுடையவராயிருத்தல் வேண்டும். அதாவது 01.11.2007–க்கு முன்னர் அவர் பட்டம் பெற்றிருக்கவேண்டும். இணைக்கல்வித் தகுதிகளின் பட்டியல் கீழே முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களிடம் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் உள்ளது. www.elections.tn.gov.in என்ற வலைதளத்திலிருந்தும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மூன்றாண்டு காலம் என்பதை பல்கலைக்கழகம் அல்லது சம்பந்தப்பட்ட அதிகார அமைப்பினால் நடத்தப்பட்ட தகுதியேற்படுத்தும் பட்டப்படிப்புத் தேர்வின் முடிவு அறிவிக்கப்பட்டு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து கணக்கிடவேண்டும்.

(ஆ) படிவம் 18–உடன் தகுந்த ஆதாரமாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனுமொரு ஆவணச் சான்றின் சுய சான்றொப்பமிட்ட நகலை எல்லா நேர்வுகளிலும் இணைக்கவேண்டும்:

(1) பல்கலைக்கழகம் அல்லது தொடர்புடைய கல்விக்கழகத்தால் வழங்கப்பட்ட பட்டம், பட்டயம் அல்லது சான்றிதழின் மூலப்பிரதி அல்லது சுய சான்றொப்பமிட்ட அதன் நகல்; அல்லது

(2) அரசுப் பதிவுருவிலுள்ள ஒரு பதிவின் ஒரு நகல் அல்லது அரசிதழ் பதிவுபெற்ற அலுவலகத் தலைவர் தம்முடைய பொறுப்பிலுள்ள அரசுப் பதிவுருக்களில் காணும் பதிவுகளின் அடிப்படையில் கீழே மூன்றாம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ள வரையறுக்கப்பட்ட படிவத்தில் அளிக்கும் சான்றிதழ் அல்லது சட்டப்படியான அமைப்பு, அரசு நிறுவனம் அல்லது பொதுத்துறை நிறுவனத்தின் பதிவுருக்களில் விண்ணப்பதாரரின் பட்டம், பட்டயம் அல்லது சான்றிதழ் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ள (அலுவலகத் தலைவரால் சான்றொப்பமிடப்பட்ட) ஒரு பதிவின் ஒரு நகல்.

(3) பல்கலைக் கழகத்தால் வழங்கப்பட்ட பட்டதாரி பதிவு அட்டையின் சான்றொப்பமிட்ட ஒரு நகல், பதிவுபெற்ற பட்டதாரிகளின் பட்டியல், பதிவுபெற்ற வழக்கறிஞர் பட்டியல், பதிவு பெற்ற மருத்துவர்களின் பதிவேடு, பதிவுபெற்ற பட்டயக் கணக்கர்களின் பதிவேடு, பொறியாளர்கள் கழகத்தால் பராமரிக்கப்படும் பதிவுபெற்ற பொறியாளர்களின் பதிவேடு முதலியவற்றிலுள்ள பதிவின் சான்றிடப்பட்ட நகல் ; அல்லது

(4) பல்கலைக்கழகப் பதிவாளரால் அல்லது ஏதேனுமொரு பல்கலைக்கழகத்தின் சார்பு பெற்ற கல்லூரியின் முதல்வரால் அல்லது விண்ணப்பதாரர் பயின்ற அக்கல்லூரியின் துறைத் தலைவரால் அளிக்கப்பட்ட சான்றிதழை ஆதாரமாகக் கொண்ட விண்ணப்பதாரரின் ஆணையுறுதி ஆவணம்.

(5) தொடர்புடைய பல்கலைக் கழகம் அல்லது கல்வி நிறுவனத்தால் அளிக்கப்பட்ட அசல் மதிப்பெண் பட்டியல் அல்லது அம்மதிப்பெண் பட்டியலின் சுயமாகச் சான்றொப்பமிடப்பட்ட நகல். அத்தேர்வில் விண்ணப்பதாரர் தேர்ச்சியடைந்தது குறித்து அம்மதிப்பெண் பட்டியலில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

(இ) படிவம் 18–இல் விண்ணப்பிக்கும் ஒவ்வொரு நபரும் தம்முடைய தகுதிக்கு ஆதாரமாக மேலே குறிப்பிடப்பட்ட ஏதேனுமொரு ஆவணத்தை சரிபார்ப்பிற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைப்படி **அசலாக** சமர்ப்பிக்க வேண்டும் :

(1) விண்ணப்பதாரர் தாமே நேரடியாக விண்ணப்பத்தை அளிக்கும் நேர்வுகளில், அதற்கென நியமிக்கப்பட்டுள்ள நிர்ணயிக்கப்பட்ட அலுவலரிடம் அசல் ஆதார ஆவணத்தைக் காட்டவேண்டும். அந்த ஆவணத்தைக் கூராய்வு செய்யும் நிர்ணயிக்கப்பட்ட அலுவலர், "அசலுடன் ஒப்பாய்வு செய்யப்பட்டு சரியெனக் கண்டறியப்பட்டது" அல்லது "அசலுடன் ஒப்பாய்வு செய்யப்பட்டு சரியில்லை எனக் கண்டறியப்பட்டது, தள்ளுபடி செய்யப்படுகின்றது" என்று பதிவு செய்வார். பிறகு நிர்ணயிக்கப்பட்ட அலுவலர் விண்ணப்பத்தில், தாம் மேற்கொண்ட சுருக்கமான விசாரணைக்கு அடையாளமாகத் தமது கையொப்பத்துடன் முழுப்பெயரையும் எழுதி விண்ணப்பதாரர் அளித்த அசல் ஆவணத்தின் ஒளிநகலையும் இணைத்து வாக்காளர் பதிவு அதிகாரிக்கு விண்ணப்பத்தினை அனுப்புவார்.

(2) ஆதார ஆவணத்தின் சான்றொப்பமிடப்பட்ட நகல்களுடன் விண்ணப்பம் வாக்காளர் பதிவு அதிகாரிக்கு அஞ்சல் மூலம் அனுப்பப்படும் நேர்வுகளில், அதனை வாக்காளர் பதிவு அதிகாரி விண்ணப்பதாரர் வசிக்கும் பகுதிக்குப் பொறுப்பான நிர்ணயிக்கப்பட்ட அலுவலருக்கு அனுப்புவார். அசல் ஆவணத்தை 09.11.2010 அன்றோ அல்லது அதற்கு முன்பாக ஏதேனுமொரு அலுவலக வேலை நாளிலோ நிர்ணயிக்கப்பட்ட அமைவிடத்தில் நிர்ணயிக்கப்பட்ட அலுவலரிடம் விண்ணப்பதாரர் காட்டவேண்டும். அதன் பின்னர் மேலே பத்தி (1)–இல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைப்படி நிர்ணயிக்கப்பட்ட அலுவலர் விசாரணை மேற்கொண்டு தம்முடைய முடிவினைப் பதிவு செய்வார். வருவாய்க் கோட்டாட்சியர்/உதவி வருவாய் அலுவலரின் விசாரணை முடிந்தபின்னர் விண்ணப்பம் உரிய வாக்காளர் பதிவு அதிகாரிக்கு அனுப்பப்படும்.

(3) சரிபார்ப்புக்காக அசல் ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாத எந்த ஒரு விண்ணப்பமும் முழுமையற்றதாகக் கருதப்பட்டு வாக்காளர் பதிவு அதிகாரியால் தள்ளுபடி செய்யப்படும்.

(ஈ) நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ ஒட்டுமொத்தமாக அளிக்கப்படும் பெயர் சேர்த்திடுவதற்கான விண்ணப்பங்கள் வாக்காளர் பதிவு அலுவலரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. இருப்பினும், ஒரு குடும்பத்தின் மற்ற உறுப்பினர்களுக்காக அதே குடும்பத்தின் ஒரு உறுப்பினர் படிவம் 18–ஐத் தாக்கல் செய்து அவர்கள் ஒவ்வொருவரின் அசல் ஆவணங்களையும் ஆய்வுக்காக சமர்ப்பிக்கலாம்.

**3. ஆசிரியர்கள் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பதிவு செய்யப்படுவதற்கான தகுதிகள்**

(அ) இந்தியக் குடிமகன்/ள்–ஆகவும் தொகுதியில் சாதாரணமாக வசிப்பவராகவும் இருக்க வேண்டும். மேலும் 01.11.2010–க்கு முன்பாக கடந்த ஆறு ஆண்டு காலத்தில், குறைந்த பட்சமாக மொத்தம் மூன்றாண்டு கால அளவிற்கு, மாநிலத்திலுள்ள இடைநிலைப் பள்ளித் தரத்திற்குக் குறையாத, குறிப்பிடப்பட்ட கல்வி நிறுவனங்களில் ஆசிரியப் பணியாற்றியவராயும், வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படத் தகுதியுடையவராயும் இருத்தல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட கல்வி நிறுவனங்களின் பட்டியல் கீழே முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்களிடம் நிர்ணயிக்கப்பட்ட அமைவிடங்களில் உள்ளது. **www.elections.tn.gov.in** என்ற வலைதளத்திலும் அதனைக் காணலாம்.

(ஆ) ஆசிரியர்கள் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்கப்படக் கோரும் ஒரு நபரின் படிவம் 19–உடன், ஒரு ஒப்பளிப்பு செய்யப்பட்ட பணியிடத்தில் முந்தைய ஆறு ஆண்டுகளில் மொத்தம் மூன்றாண்டு கால அளவிற்கு ஆசிரியப் பணியாற்றியமைக்கான சான்றிதழை கல்வி நிறுவனத்தின் தலைவரிடமிருந்து பெற்று இணைக்க வேண்டும். அச்சான்றிதழின் மாதிரிப் படிவம் கீழே ஐந்தாம் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு நபர் ஒன்றுக்கு மேற்பட்ட கல்வி நிறுவனங்களில் ஆசிரியப் பணியாற்றியிருக்கும் நேர்வில், அந்த ஒவ்வொரு கல்வி நிறுவனத்திடமிருந்தும் தனித்தனிச் சான்றிதழ்களைப் பெற்று இணைக்கவேண்டும்.

(இ) விண்ணப்பதாரர் விண்ணப்பிக்கும் தேதியில் ஆசிரியர் பணியில் இல்லாமல் இருக்கும்பட்சத்தில், சான்று(கள்) அவர் கடந்த ஆறு ஆண்டு காலத்தில் 3 ஆண்டுகள் பணிபுரிந்த கல்வி நிறுவனத்தினால் கையொப்பமிடப்படவேண்டும்

(ஈ) நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ ஒட்டுமொத்தமாக அளிக்கப்படும் பெயர் சேர்த்திடுவதற்கான விண்ணப்பங்கள் வாக்காளர் பதிவு அலுவலரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. இருப்பினும் தகுதியுள்ள கல்வி நிறுவனங்களின் தலைவர்கள் அந்நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்களின் படிவம் 19 விண்ணப்பங்களை தனித்தனியாக பெற்று தனித்தனிச் சான்றுகளுடன் இணைத்து ஒட்டுமொத்தமாக அளித்திடலாம்.

4 ஆசிரியர்கள் மற்றும் பட்டதாரிகள் ஆகிய இரண்டு தொகுதிகளின் வாக்காளர் பட்டியலிலும் சேர்த்திடுவதற்கு தகுதியான நபர்கள் தனித்தனியே படிவம் 18 மற்றும் படிவம் 19இல் விண்ணப்பித்திட வேண்டும்.

5 விண்ணப்பதாரர் இருப்பிடச் சான்றாக கீழ்க்காணும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்றின் நகலினை படிவம் 18 / படிவம் 19 உடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.

(அ) வங்கி/கிசான்/அஞ்சல் அலுவலக நடப்புக் கணக்குக் கையேடு; அல்லது

(ஆ) விண்ணப்பதாரரின் உணவுப்பொருள் பங்கீட்டு அட்டை/கடவுச்சீட்டு/ஓட்டுநர் உரிமம்/ வருமான வரி விதிப்பு ஆணை; அல்லது

(இ) விண்ணப்பதாரரின் பெயரிலோ அல்லது அவரது பெற்றோர் போன்ற நெருங்கிய உறவினர் பெயரிலோ உள்ள குடிநீர்/தொலைபேசி/மின்சாரம் சமையல் எரிவாயு இணைப்பு போன்றவற்றின் சமீபத்திய ரசீது; அல்லது

(ஈ) கொடுத்துள்ள முகவரியில் விண்ணப்பதாரரின் பெயருக்கு வந்து சேர்ந்த தபால் துறையின் தபால்கள்

6 எவராவது பொய்யான அல்லது பொய்யானதென்று தாம் அறிந்துள்ள அல்லது நம்புகிற அல்லது உண்மையானதென்று நம்பாத அறிக்கையை அல்லது உறுதிமொழியை விண்ணப்பத்தில் அளித்தால் அவர் 1950ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 31வது பிரிவின்கீழ் தண்டிக்கப்படத் தக்கவராவார்.

7 படிவம் 18 மற்றும் 19 விண்ணப்பங்கள் அச்சடிக்கப்பட்ட, எழுதப்பட்ட, தட்டச்சு செய்யப்பட்ட, படிபெருக்கம் செய்யப்பட்ட அல்லது தனியாக அச்சிடப்பட்ட வடிவில் ஏற்றுக் கொள்ளப்படும். படிவங்கள் www.elections.tn.gov.in என்ற வலைதளத்திலிருந்தும் இலவசமாகவும் பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்.

### முதலாவது அட்டவணை

| வ. எண் | மேலவை தொகுதியின் பெயர் | | அடங்கியுள்ள மாவட்டங்கள் | வாக்காளர் பதிவு அலுவலரின் பதவி மற்றும் அலுவலக முகவரி | தொலைபேசி எண் |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 1 | **சென்னை பட்டதாரிகள் தொகுதி** | **சென்னை ஆசிரியர்கள் தொகுதி** | திருவள்ளூர், சென்னை, காஞ்சிபுரம் | மாவட்ட வருவாய் அலுவலர் (நிலம் மற்றும் உடைமை), சென்னை மாநகராட்சி, சென்னை–3 | 044–25366370 |
| 2 | **தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள் தொகுதி** | **தமிழ்நாடு வடக்கு ஆசிரியர்கள் தொகுதி** | வேலூர், கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருவண்ணாமலை | மாவட்ட வருவாய் அலுவலர், வேலூர் | 0416–2253502 |
| 3 | **தமிழ்நாடு வடக்கு மத்தியம் பட்டதாரிகள் தொகுதி** | **தமிழ்நாடு வடக்கு மத்தியம் ஆசிரியர்கள் தொகுதி** | விழுப்புரம், சேலம், நாமக்கல், கடலூர், | மாவட்ட வருவாய் அலுவலர், சேலம் | 0427–2442663 |
| 4 | **தமிழ்நாடு மேற்கு பட்டதாரிகள் தொகுதி** | **தமிழ்நாடு மேற்கு ஆசிரியர்கள் தொகுதி** | ஈரோடு, நீலகிரி, கோயம்புத்தூர், திருப்பூர், கரூர் | மாவட்ட வருவாய் அலுவலர், கோயம்புத்தூர் | 0422–2300035 |
| 5 | **தமிழ்நாடு கிழக்கு மத்தியம் பட்டதாரிகள் தொகுதி** | **தமிழ்நாடு கிழக்கு மத்தியம் ஆசிரியர்கள் தொகுதி** | திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், நாகப்பட்டினம், திருவாரூர், தஞ்சாவூர் | மாவட்ட வருவாய் அலுவலர், திருச்சிராப்பள்ளி | 0431–2460016 |
| 6 | **தமிழ்நாடு தெற்கு மத்தியம் பட்டதாரிகள் தொகுதி** | **தமிழ்நாடு தெற்கு மத்தியம் ஆசிரியர்கள் தொகுதி** | திண்டுக்கல் புதுக்கோட்டை, சிவகங்கை, மதுரை, இராமநாதபுரம் | மாவட்ட வருவாய் அலுவலர், மதுரை | 0452–2532106 |
| 7 | **தமிழ்நாடு தெற்கு பட்டதாரிகள் தொகுதி** | **தமிழ்நாடு தெற்கு ஆசிரியர்கள் தொகுதி** | தேனி, விருதுநகர், தூத்துக்குடி, திருநெல்வேலி, கன்னியாகுமரி | மாவட்ட வருவாய் அலுவலர், திருநெல்வேலி | 0462–2500466 |

**மேற்கண்ட தொகுதிகளில் உதவி வருவாய் அலுவலர்கள் (சென்னை மாநகராட்சி பகுதியில்), சார் ஆட்சியர் / உதவி ஆட்சியர் / வருவாய் கோட்டாட்சியர் ஆகிய அலுவலர்கள் (பிற பகுதிகளில்) உதவி வாக்காளர் பதிவு அலுவலராக இருப்பர்.**

### இரண்டாவது அட்டவணை

படிவம் 18 (31– ஆம் விதியைப் பார்க்கவும்)

**பட்டதாரிகள் தொகுதி ஒன்றின் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான கோரிக்கை**

பெறுநர்
வாக்காளர் பதிவு அலுவலர்,
______________________ (பட்டதாரிகள்) தொகுதி

ஐயா,
______________________ (பட்டதாரிகள்) தொகுதியின் வாக்காளர் பட்டியலில் என்னுடைய பெயர் பதிவு செய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்

விவரங்கள் வருமாறு:

பெயர் (முழுமையாக) ______________ பாலினம் ______________

தந்தை/தாய்/கணவர் பெயர்(முழுமையாக) ______________

தகுதி ______________ பணி ______________

வீட்டு முகவரி (சாதாரணமாக வசிக்கும் இடம்)

வீட்டு எண் ______________ தெரு ______________

______________________

நகரம் / கிராமம் ______________ அஞ்சல்அலுவலகம் ______________

காவல் நிலையம் / வட்டம் ______________ மாவட்டம் ______________

வயது ______________

2. *______________ ஆண்டில் பட்ட/பட்டயத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள நான், ______________ பல்கலைக் கழகத்தின் பட்டதாரியாவேன்.

**அல்லது**

*ஒரு இந்தியப் பல்கலைக்கழகத்தின் பட்டதாரித் தகுதிக்குச் சமமான ______________ பட்டயம் / சான்றிதழ் தேர்வில் ______________ ஆண்டில் தேர்ச்சி பெற்று அந்த பட்டயம் / சான்றிதழை நான் வைத்துள்ளேன்.

3. பட்டதாரி என்பதற்கான, மேற்கூறிய பட்டயம்/சான்றிதழ் என்னிடம் உள்ளது என்பதற்கான, ஆதாரமாக ______________ .ஐ சமர்ப்பிக்கிறேன்

4. **என்னுடைய பெயர் இந்த பட்டதாரிகள் தொகுதியின் வாக்காளர் பட்டியலிலோ அல்லது வேறெந்த பட்டதாரிகள் தொகுதியின் வாக்காளர் பட்டியலிலோ சேர்க்கப்படவில்லை.

**அல்லது**

** என்னுடைய பெயர் ______________ பட்டதாரிகள் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் கீழ்க்கண்ட முகவரியில் சேர்க்கப்பட்டுள்ளது. அந்த வாக்காளர் பட்டியலிலிருந்து அதனை நீக்குமாறு நான் கோருகிறேன்

______________________

______________________

5. நான் ஒரு இந்தியக் குடிமகன்/ள் என்றும், நான் மிக நன்றாக அறிந்தவரையில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்றும் உறுதிகூறுகிறேன்.

இடம் ______________ ..............................

நாள் ______________ **விண்ணப்பதாரரின் கையொப்பம்**

**குறிப்பு:** எவராவது பொய்யான அல்லது பொய்யானதென்று தாம் அறிந்துள்ள அல்லது நம்புகிற அல்லது உண்மையானதென்று நம்பாத அறிக்கையை அல்லது உறுதிமொழியை கொடுத்தால் அவர் 1950ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 31வது பிரிவின்கீழ் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

* பொருந்தாத பத்தியை அடித்து விடவும் ** பொருத்தமற்றதை அடித்துவிடவும்

**எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தெரிவித்தல்**

திரு/திருமதி/செல்வி ______________ (முகவரி) ______________
______________ யின் படிவம் 18 விண்ணப்பமானது

(அ) ஏற்றுக்கொள்ளப்பட்டு திரு/திருமதி/செல்வி ______________ யின் பெயர் ______________ வரிசை எண்ணில் ______________ பாகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது

(ஆ) ______________ என்ற காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டது.

நாள் .................... **வாக்காளர் பதிவு அதிகாரி**

(முகவரி) ....................

✂ ✂

**படிவம் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை**

திரு/திருமதி/செல்வி ______________ (முகவரி) * ______________
______________ யின் படிவம் 18 விண்ணப்பம்

பெற்றுக்கொள்ளப்பட்டது

நாள்.................... **வாக்காளர் பதிவு அதிகாரி**

(முகவரி) ....................

*விண்ணப்பதாரரால் நிரப்பப்படவேண்டும்

### மூன்றாவது அட்டவணை

**பட்டதாரி ஊழியரின் கல்வித் தகுதி குறித்து அரசிதழ் பதிவு பெற்ற அலுவலகத் தலைவர் அளிக்கும் சான்று**

இவ்வலுவலகத்தில் ....................
ஆக பணிபுரியும் திரு/திருமதி/ செல்வி ....................
த/பெ க/பெ ...................., எனது இருப்பில் உள்ள அரசு ஆவணங்களின் அடிப்படையில் ....................
(இங்கே பல்கலைகழகம்/வாரியம்/தொழிலகம் குறித்த விவரத்தினை குறிப்பிடுக)யில் .................... (இங்கே பட்டம்/பட்டயம் குறித்த விவரத்தினை குறிப்பிடுக).................... ஆம் ஆண்டில் தேர்ச்சி பெற்றுள்ளார்

**அல்லது**

*( இந்திய நாட்டின் எல்லைக்குள் உள்ள பல்கலைகழகங்களினால் வழங்கப்படும் பட்டம் மற்றும் அதற்கு ஈடான தகுதியினை பணிபுரியும் வேலைக்கான குறைந்தபட்ச தகுதியாக கொண்ட நேர்வுகளில்) .................... (இங்கே அலுவலகத்தின் பெயரினை குறிப்பிடுக) இல் ....................(இங்கே மேற்குறிப்பிட்ட பணியில் சேர்ந்த தேதியினை குறிப்பிடுக) முதல் பணியாற்றி வருகிறார்

என சான்றளிக்கப்படுகிறது.

இடம் : .................... **(அலுவலகத் தலைவரின் கையொப்பம்)**

நாள்.................... (அரசிதழ் பதிவு பெற்ற அலுவலரால் கையொப்பமிடப்பட வேண்டும்)

*பொருந்தாதவற்றை அடித்திடுக

### நான்காவது அட்டவணை

படிவம் 19 (31ஆவது விதியினைப் பார்க்கவும் )

ஆசிரியர்கள் தொகுதி ஒன்றின் வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்ப்பதற்கான கோரிக்கை

பெறுநர்
வாக்காளர் பதிவு அலுவலர்,
______________________ (ஆசிரியர்கள்) தொகுதி.

ஐயா,
______________________ (ஆசிரியர்கள்) தொகுதிக்கான வாக்காளர் பட்டியலில் என்னுடைய பெயர் பதிவுசெய்யப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

விவரங்கள் வருமாறு:

பெயர் (முழுமையாக) ______________ பாலினம் ______________

தந்தை/தாய்/கணவர் பெயர் (முழுமையாக) ______________

வீட்டு முகவரி (சாதாரணமாக வசிக்கும் இடம்) ______________

வீட்டு எண் ______________ தெரு ______________

______________________

நகரம் / கிராமம் ______________ அஞ்சல் அலுவலகம் ______________

காவல் நிலையம் / வட்டம் ______________ மாவட்டம் ______________

வயது ______________

2. கடந்த ஆறு ஆண்டு காலத்தில், மொத்தம் மூன்றாண்டுகளுக்கும் அதிகமான கால அளவிற்கு நான் ஆசிரியப் பணியாற்றியுள்ளேன். அதுபற்றிய விவரம் வருமாறு

| கல்வி நிறுவனத்தின் பெயர் | முதல் (தேதி) | வரை (தேதி) | கால அளவு |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |

மேற்சொன்னவற்றிற்கு ஆதாரமாக நான் பின்வருவனவற்றைச் சமர்ப்பிக்கிறேன் ______________

3 *என்னுடைய பெயர் இந்த ஆசிரியர்கள் தொகுதியின் வாக்காளர் பட்டியலிலோ அல்லது வேறெந்த ஆசிரியர்கள் தொகுதியின் வாக்காளர் பட்டியலிலோ சேர்க்கப்படவில்லை.

**அல்லது**

* என்னுடைய பெயர் ______________ ஆசிரியர்கள் தொகுதியின் வாக்காளர் பட்டியலில் கீழ்க்கண்ட முகவரியில் சேர்க்கப்பட்டுள்ளது. அந்த வாக்காளர் பட்டியலிலிருந்து அதனை நீக்குமாறு நான் கோருகிறேன்

______________________

4. நான் ஒரு இந்தியக் குடிமகன்/ள் என்றும், நான் மிக நன்றாக அறிந்தவரையில் மேலே கொடுக்கப்பட்டுள்ள விவரங்கள் அனைத்தும் உண்மை என்றும் உறுதிகூறுகிறேன்.

இடம்.................... ....................

நாள் .................... **விண்ணப்பதாரரின் கையொப்பம்**

குறிப்பு: எவராவது பொய்யான அல்லது பொய்யானதென்று தாம் அறிந்துள்ள அல்லது நம்புகிற அல்லது உண்மையானதென்று நம்பாத அறிக்கையை அல்லது உறுதிமொழியை கொடுத்தால் அவர் 1950ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 31வது பிரிவின்கீழ் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

* பொருந்தாத பத்தியை அடித்து விடவும்

**எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து தெரிவித்தல்**

திரு/திருமதி/செல்வி ______________
(முகவரி)* ______________ யின் படிவம் 19 விண்ணப்பமானது

(அ) ஏற்றுக்கொள்ளப்பட்டு திரு/திருமதி/செல்வி ______________ யின் பெயர் ______________ வரிசை எண்ணில் ______________ பாகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது

(ஆ) ______________ என்ற காரணத்திற்காக தள்ளுபடி செய்யப்பட்டது.

நாள் .................... **வாக்காளர் பதிவு அதிகாரி**

(முகவரி) ....................

✂ ✂

**படிவம் பெற்றுக் கொண்டதற்கு ஒப்புகை**

திரு/திருமதி/செல்வி ______________
(முகவரி)* ______________ யின் படிவம் 19 விண்ணப்பம் பெற்றுக்கொள்ளப்பட்டது

நாள்.................... வாக்காளர் பதிவு அதிகாரி

(முகவரி) .................... ....................

*விண்ணப்பதாரரால் நிரப்பப்படவேண்டும்

### ஐந்தாவது அட்டவணை

**சான்று**

______________ (கல்வி நிறுவனத்தின் பெயர்) இல் திரு/திருமதி/செல்வி ______________ கடந்த ஆறு ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்ட நிரந்தர / *தற்காலிக பதவி ஒன்றில் ஆசிரியராக .................... ஆண்டுகள் கீழ்க்குறிப்பிட்டவாறு பணிபுரிந்து வந்துள்ளார்

2. * அ) இந்நிறுவனத்தில் உள்ள ஆவணங்களின்படி அவர் .................... முதல் .................... வரை இந்நிறுவனத்தில் தொடர்ச்சியாக பணியாற்றினார்

**அல்லது**

*ஆ) இந்நிறுவனத்தில் உள்ள ஆவணங்களின்படி அவர் கீழ்க்கண்ட காலங்களில் இந்நிறுவனத்தில் பணியாற்றி வந்துள்ளார்

______________ முதல் ______________ வரை
______________ முதல் ______________ வரை

இ) திரு/திருமதி/செல்வி ______________ மேற்கண்ட காலங்களில் பகுதி நேர ஆசிரியராக அல்லாமல் முழுநேர ஆசிரியராகவே பணியில் இருந்தார் எனவும் சான்றளிக்கப்படுகிறது.

(கல்வி நிறுவனத்தின் பெயர், முத்திரை மற்றும் கையொப்பம்)

*பொருந்தாதவற்றை அடித்திடுக

### ஆறாவது அட்டவணை

தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் பட்டதாரிகள் தொகுதிகள் மற்றும் ஆசிரியர்கள் தொகுதிகள் ஆகியவற்றிற்கான வாக்காளர் பட்டியல் தயார் செய்வதற்கான கால அட்டவணை

| வ. எண் | பணிகள் | கால அளவு / தேதி |
|---|---|---|
| 1 | விண்ணப்பங்கள் பெறப்படுவது தொடங்குதல் | **01.10.2010 (வெள்ளிக் கிழமை)** |
| 2 | விண்ணப்பங்கள் பெறுவதற்கான சிறப்பு முகாம் நாட்கள் | 16.10.2010 (சனிக்கிழமை)<br>17.10.2010 (ஞாயிற்றுக்கிழமை)<br>30.10.2010 (சனிக்கிழமை)<br>31.10.2010 (ஞாயிற்றுக்கிழமை) |
| 3 | விண்ணப்பங்கள் பெறுவதற்கான கடைசி நாள் | 06.11.2010 (சனிக்கிழமை) |

DIPR/1253/Display/10

**தலைமைத் தேர்தல் அதிகாரி**
**தமிழ்நாடு**